**IN THE COURT OF THE SUB JUDGE, DENKANIKOTTAI**
**O.S.No. 411 /2021**

Deposition of witness **DW2** for Defendants and solemnly affirmed and oath for sworn taken file by Tr.S.Prakash, Gr.II Bench Clerk in accordance with the provisions of Act 1975.

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | Nagarjuna /Record Clerk | Father's Name | : |
| Village | : | Denkanikottai, Taluk Office | Age | : |

**நாள்:10.06.2025.**
**பி.வா.சா.2 முதல் விசாரணை:**

நான் தேன்கனிக்கோட்டை தாசில்தார் அலுவலகத்தில் Record clerk ஆக பணியாற்றி வருகிறேன். தேன்கனிக்கோட்டை தாசில்தாருக்கு இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்துள்ளது.

தேன்கனிக்கோட்டை தாசில்தார் அவர்களுக்கு இன்று சட்ட ஒழுங்கு மற்றும் அரசு நலதிட்டங்கள் தொடர்பான ஆய்வு பணி மேற்கொள்ள இருப்பதால் அவருக்கு பதிலாக என்னை சாட்சியம் அளிக்க கொடுத்துள்ள கடிதம் **Ex.X1** ஆகும்.

சாட்சி அழைப்பாணையில் கேட்டுள்ள ஆவணங்கள் கொண்டுவந்துள்ளேன்.

பட்டா எண்.5640, அதற்குண்டான உத்தரவு, பட்டா எண்.6165, அதற்கான உத்தவு, ஆகிய ஆவணங்கள் கொண்டுவந்துள்ளேன். பட்டா எண்.5640 கணினி சிட்டா **Ex.X2** ஆகும், அதற்குண்டான உத்தரவு **Ex.X3** ஆகும், பட்டா எண்.6165 க்கான கணினி சிட்டா **Ex.X4** ஆகவும், அதற்குண்டான உத்தவு **Ex.X5** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை வாதிகள் தரப்பில்**

பட்டா எண்.6165 இதற்கு முன்பு எந்த பட்டா எண்ணில் யாருடைய பெயரில் இருந்தது என்றால் பழைய பட்டா எண்.758 ஆகும். அது ராமையா மகன் வெங்கட்டராமையா என்பவர் பெயரில் இருந்தது. பட்டா எண்.5640 இதற்கு முன்பு எந்த பட்டா எண்ணில் யாருடைய பெயரில் இருந்தது என்றால் பழைய பட்டா எண். 758 ஆகும். அது ராமையா மகன் வெங்கட்டராமையா என்பவர் பெயரில் இருந்தது. பட்டா எண்.6165 எதன் அடிப்படையில் பெயர் மாற்றம்

செய்யப்பட்டது வெங்கட்டராமையாவின் இறப்பு சான்றிதழ், அவருடைய மனைவி ராமக்கா இறப்பு சான்றிதழ், அவர்களுடைய இரண்டுபேரின் வாரிசு சான்றிதழ் அடிப்படையில் பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பட்டா எண்.5640 எதன் அடிப்படையில் பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்றால் Doc.No.542/2008 என்ற ஆவணத்தின் அடிப்படையில் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. பட்டா எண்.5640க்கு அந்த சொத்துக்குண்டான முன் ஆவணங்களை நாங்கள் பார்க்காமல் பெயர் மாற்றம் செய்திருப்பது தவறு என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

**ஒம்./- எஸ்.விஜய் அழகிரி,. பி.காம்.,பி.எல்.,**
**சார்பு நீதிபதி,**
**தேன்கனிக்கோட்டை.**